ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2131/61 - 2019 ජූලි මස 13 වැනි සෙනසුරාදා - 2019.07.13

*2131/61 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

*அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களைக் கையளித்தல்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள, 2017.02.01 ஆந் திகதிய 2004/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள "அ" அட்டவணையில் 06 மற்றும் 08 இன் கீழ் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் நீக்கப்பட்டு, தொடர் இலக்கம் 06 இன் கீழ், கையளிக்கப்படும் பின்வரும் அதிகாரங்கள் 2019.07.11 ஆந் திகதி முதல் செயல்படும் வண்ணம் உள்ளடக்கப்படுகின்றன.

**அட்டவணை "அ"**

| நிரல் I<br>உத்தியோகத்தர் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 6. சுகாதார விடயத்துக்குப் பொறுப் பான அமைச்சரது அமைச்சின் கீழ் வரக்கூடிய இணைந்த சேவையைச் | சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கு/ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவாக நியமனம் மற்றும் பதவி உயர்வு. |

**அட்டவணை "அ"** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br><br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| சாராத இல. 06/ 2006 என்னும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் (இணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட உத்தியோ கத்தர்கள் (ஆயுர்வேத திணைக்களம் தவிர்ந்த). | குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர். | II. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் மற்றும் பதவி நீக்கம் செய்தல்.<br><br>III. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/ 2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் தொடர்பில் நிவாரணங்கள் வழங்குதல்.<br><br>IV. அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட நட வடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும். |

2. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட 2017.02.01 ஆந் திகதிய 2004/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் வலுவிலிருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 1200/09, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 03.

07-978

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.